இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 09-05-2023

# மணிப்பூர் எரிவது ஏன்? 1

**பா.**ஜ.க. ஆளும் மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது. கடந்த ஆண்டு தான் அங்கு சட்டமன்றத் தேர்தல் நடந்தது. இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்தது பா.ஜ.க. இதோ பற்றி எரிகிறது அந்த மாநிலம். கர்நாடகா தேர்தல் பரப்புரையைக் கூட ஒத்தி வைத்து விட்டு மணிப்பூர் தீயை அடக்கிக் கொண்டு இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

**மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வன்முறையில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. இண்டர்நெட் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. வன்முறையாளர்களை கண்டவுடன் சுடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. வன்முறை பகுதிகளில் போலீசார் மற்றும் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டனர். இதையடுத்து ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மணிப்பூர் நிலவரம் பற்றி அதிகாரிகளுடன் ஆலோசித்தார். உடனடியாக மத்திய பாதுகாப்பு படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.**

மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை மேற்பார்வையிட உளவுத்துறை டி.ஜி.பி. அசுதோஷ் சின்ஹாவை ஒன்றிய அரசு நியமனம் செய்துள்ளது. அதோடு முன்னாள் டி.ஜி.பி.யான குல்தீப் சிங்கையும் அங்கு நியமனம் செய்துள்ளது. இதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது ஆர்.பி.எப். எனும் அதிரடி படையினர், சி.ஆர்.பி.எப்., பி.எஸ்.எப். உள்ளிட்ட மத்திய படை வீரர்கள் மணிப்பூரில் பாதுகாப்பு பணிக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

**தற்போதைய சூழலில் மணிப்பூர் மாநிலத்தில் வன்முறை பகுதியில் இருந்து 20 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.**

**மேலும் 600க்கும் அதிகமானவர்கள் அண்டை மாநிலங்களில் தஞ்சமடைந்துள்ளனர். தொடர்ந்து மக்கள் வெளியேற தொடங்கி உள்ளனர். மணிப்பூர் கலவரத்தில் 54 பேர் வரை கொலை செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. வன்முறை கும்பல் தாக்கியதில் அவர்கள் இறந்திருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இம்பால் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தீ வைக்கப்பட்ட கடைகள், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் பற்றிய கணக்கெடுப்பு பணியும் நடந்து வருகிறது.**

மணிப்பூரில் வன்முறை பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து சுமார் 13 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். மலைப்பகுதிகளில் இருப்போர் ராணுவ விமானங்கள் மூலம் மீட்கப்பட்டு பாதுகாப்பு மையங்களுக்கு அழைத்து வரப்படுகிறார்கள். மணிப்பூரில் தற்போது வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அங்கு பாதுகாப்பு பணிக்குச் சென்ற ராணுவத்தினர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

குக்கி போர் நினைவுச்சின்னம் எரிக்கப்பட்டது. குக்கி சமூகத்தைச் சேர்ந்த டி.ஜி.பி. பி டவுங்கலை, காவல்துறைத் தலைவர் பொறுப்பில் இருந்து விலக்கி, கூடுதல் டி.ஜி.பி. (உளவுத்துறை) அசுதோஷ் சின்ஹாவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மணிப்பூர் மாநிலம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

3200 மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் மற்றும் ராணுவத்தின் விமான படையினர் அங்கு முகாமிட்டு அமைதி திரும்ப ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள். இம்பாலில் உள்ள அரசு குடியிருப்பில் வசித்து வந்த இந்திய வருவாய்துறை அதிகாரி லெட்மின்தாங் ஹாக்கிப்பின் என்பவர் வன்முறையாளர்களால் அடித்து கொல்லப்பட்ட சம்பவம் வெளியாகி உள்ளது.

இம்பாலில் உதவி வரித்துறை அதிகாரியாகப் பணியாற்றி வந்தவர் லெட்மின்தாங் ஹாக்கிப்பின். அங்குள்ள அரசு குடியிருப்பில் வசித்து வந்தார். கலவரத்தின் போது ஒரு கும்பல் அவரது வீட்டுக்குள் புகுந்து அவரை வெளியே இழுத்து வந்துள்ளது. பின்னர் அவர்கள் அவரை சரமாரியாக அடித்து உதைத்துள்ளனர். இதில் படுகாயம் அடைந்த அதிகாரி லெட்மின் தாங் ஹாக்கிப்பின் பரிதாபமாக இறந்துள்ளார்.

**“இவரது இறப்பை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. குரூரமாக நடந்த இந்த சம்பவத்தின் மூலம் அதிகாரி லெட்மின்தாங் ஹாக்கிப்பின் குடும்பத்தினர் பெரும் துயரத்திற்கு ஆளாகி உள்ளனர். அவர்களுக்கு என்ன ஆறுதல் கூறமுடியும் என தெரியவில்லை. இந்த சம்பவத்திற்கு எங்கள் அமைப்பு சார்பில் கடும் கண்டனத்தை பதிவு செய்கிறோம்” என்று ஐ.ஆர்.எஸ். அதிகாரிகள் சார்பில் அறிக்கை வெளியாகி உள்ளது.**

இந்தியாவில் அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, சிக்கிம், நாகாலாந்து, அசாம், மேகாலயா, மிசோரம் உள்ளிட்டவை வடகிழக்கு மாநிலங்களாக அழைக்கப்படுகின்றன. நிலப்பரப்பு மற்றும் மக்கள் தொகையில் இந்த மாநிலங்கள் மிகவும் சிறியவையாக உள்ளன. இங்கு அதிகளவில் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். மணிப்பூர் மாநிலத்திலும் ஏராளமான பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில்தான் மணிப்பூர் மாநிலத்தில் மைதேயி சமூகத்தினருக்கும் பழங்குடியினருக்கும் இடையில் மோதலை உருவாக்கி விட்டார்கள்.

கர்நாடகாவில் பிரச்சினையை உருவாக்கியதைப் போலவே மணிப்பூரிலும் உருவாக்கி இருக்கிறது பா.ஜ.க.

2பி - நிலையில் உள்ள மதச் சிறுபான்மையினருக்கான (முஸ்லிம்) இட ஒதுக்கீட்டை கர்நாடக பா.ஜ.க. அரசு நீக்கியது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் முஸ்லிம் மக்களுக்கு இதுவரை 4 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. அதனை மொத்தமாக நீக்கினார்கள். அவர்களை, மொத்தமாகக் கொண்டு போய் ‘பொருளாதாரத்தில் நலிவடைந்த உயர் ஜாதி ஏழைகளுக்கான’ ( EWS) பட்டியலில் சேர்த்துவிட்டார்கள். பறிக்கப்பட்ட 4 விழுக்காட்டை லிங்காயத்துகள், ஒக்கலிகா கவுடாக்கள் ஆகிய இரண்டு பிரிவுகளுக்கு தலா 2 விழுக்காடு எனக் கொடுத்துவிட்டார்கள். மதச் சிறுபான்மையினரான இசுலாமியர்களையும் – சமூகப் பிரிவுகளான இரண்டு ஜாதியினரையும் எதிரெதிராக நிறுத்திவிட்டது பா.ஜ.க. தனியாக 15 விழுக்காடு தேவை என்ற லிங்காயத்துகளுக்கு 2 விழுக்காடு மட்டுமே கொடுத்து விட்டார்கள்.

**இவை அனைத்தும் சேர்ந்து கர்நாடகாவில் கலவரத்தை ஏற்படுத்தியதைப் போலவே மணிப்பூரிலும் சமூகங்களுக்கு இடையே மோதலை உருவாக்கி விட்டது பா.ஜ.க.**

*- தொடரும்!*




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், கோவிலம்பாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள காவேரி மருத்துவமனையை திறந்து வைத்தார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, எஸ்.அரவிந்த் ரமேஷ், காவேரி மருத்துவமனை நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் எஸ்.சந்திரகுமார், மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். மணிவண்ணன், செயல் இயக்குநர் டாக்டர் எஸ்.அரவிந்தன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (8.05.2023) சென்னையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ”தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் இலச்சினை மற்றும் வலைதளத்தை இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி வெளியிட்டார். உடன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.

### வடசென்னையை அனைத்து உட்கட்டமைப்புகளுடன் மேம்படுத்திட வேண்டுமெனும் முதல்வரின் கனவை நனவாக்கிட

# சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் முனைப்பான நடவடிக்கை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, மே 09-*

*வடசென்னை பகுதியை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்திட வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவினை நனவாக்கும் வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது என அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல் தெரிவித்தார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 202324ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேற்று (8.5.2023) சென்னை, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலைப் பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன சந்தை அமைக்கப்படுவது தொடர்பாகவும், புழல், மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தை ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பது தொடர்பாகவும், புழல், மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய பள்ளி வளாகம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அமைப்பது தொடர்பாகவும், எண்ணூரில் அமைந்துள்ள தினசரி காய்கறி சந்தை மற்றும் சமுதாயக்கூடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுவது தொடர்பாகவும், திருவொற்றியூரில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் வடசென்னை மக்களுக்குப் பயன்படும் வகையில் சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆகிய இடங்களுக்கு நேரடியாக சென்று களஆய்வு மேற்கொண்டார்.*

*பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்ததாவது :*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 நிதி யாண்டிற்கான அறிவிப்புகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. இதில் சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான*

*34 அறிவிப்புகளை துரிதமாக செயல்படுத்தும் வகையில், சென்னைப் பெருநகர பகுதிக்குட்பட்ட பல்வேறு மாநகர பேருந்து நிலையங்களை தரம் உயர்த்தி நவீனமாக்குவது, விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்கள் அமைக்கப்படுவது, மாநகராட்சி பள்ளிகளில் புதிய பள்ளி வளாகங்கள் கட்டித் தருவது, சமுதாய கூடங்களை அமைத்து தருவது, சென்னையிலுள்ள சலவைக் கூடங்களை மறுவளர்ச்சி மேற்கொள்வது போன்ற பல்வேறு பணிகளை துவக்குவதற்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து இன்று (8.5.2023) ஆய்வு செய்யப்பட்ட சென்னை, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலைப் பகுதியிலுள்ள சந்தை, ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன சந்தையாக கட்டித்தரப்படும். மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புழல், மேட்டுப்பாளையம், சீனிவாசன் தெருவில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தை சிறந்த முறையில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புனரமைத்து தரப்படும்.*

*அதேபோல, புழல், மகாலட்சுமி நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியானது பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த காலத்தில் 26.04.1967 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இப்பள்ளியானது தற்போது வரையில் ஆஸ்ப்ரோ சீட்டில் தான் இயங்கி வருகிறது. அதை கான்கிரீட் தளத்துடன் கூடிய அனைத்து அடிப்படைத் தேவைகளுடன் கூடிய நடுநிலைப் பள்ளியாக மாற்றப்படும்.*

*திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எண்ணூரில் அமைந்திருக்கின்ற மீன் அங்காடி மற்றும் சாலையோர வியாபாரிகளுக்கு நிரந்தர கடைகள் அனைத்து வசதிகளுடன் கூடிய கடைகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு சிறந்த முறையில் கட்டித் தரப்படும். அதில் மீன் மற்றும் இறைச்சி கடை தனியாகவும், காய்கறி மற்றும் கடைகள் தனியாகவும் மற்றும் ஒரு திருமண மண்டபம் கட்டித் தரப்படும். அதேபோல, வடசென்னை மக்களுக்குப் பயன்படும் வகையில் பார்வதி நகரிலிருந்து காசிமேடு வரை சுமார் 5 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையை ரூ.30 கோடி செலவில் அழகுபடுத்தப்படும்.*

*சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட 50 அறிவிப்புகளில், சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொகுதிகளின் மேம்பாட்டிற்கான*

*34 அறிவிப்புகளில் 16 இடங்களில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 இடங்களிலும் வெகு விரைவில் கள ஆய்வு மேற்கொண்டு பணிகளைத் துவக்க இருக்கிறோம்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.*

*இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சட்டமன்ற உறுப்பினர்கள் (மாதவரம்) சுதர்சனம், (திருவொற்றியூர்) கே.பி.சங்கர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.அமிர்தஜோதி, பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், துணை ஆணையர் (கல்வி) திருமதி.ஷரண்யா அறி, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் திருமதி. சரிதா மகேஷ்குமார், நந்தகோபால், ஏ.வி.ஆறுமுகம், தனியரசு, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.*



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (8.5.2023) சென்னை, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலைப் பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நவீன சந்தை அமைக்கப்படுவது தொடர்பாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா , சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா , சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சு.அமிர்தஜோதி, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் ஷேக் அப்துல் ரஹ்மான், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார் , சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.